**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**O.S.No: 95/2022** **தேதி: 07.10.2025**

**வா.சா. 1 – திருமால் காந்தி**

**4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் எஸ்.எஸ்.எல்.சி படித்துள்ளேன். நான் BDO ஆக பணிபுரிந்து PA – Collector ஆக பணிபுரிந்து அதன் பின்னர் ஊரக வளர்ச்சி துறையில் துணை இயக்குநராக பணி செய்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது இடம் குறைவாக உள்ளது மற்றும் பட்டா அடுத்தவர் பெயரில் கொடுக்கப்பட்டுள்ளது அது சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். கருப்பாயி அம்மாவை எனக்கு தெரியும். இந்த வழக்கு விபரங்கள் அனைத்தும் நான் தான் வழக்கறிஞரிடம் சொன்னேன். தாவா சொத்தில் சொல்லப்பட்டுள்ள பைமாஸ் நம்பர் பற்றி எனக்கு தெரியும். பைமாஸ் நம்பர் 256, 257, 259, 260 ஆகும். எனக்கு சர்வே எண் விபரமும் தெரியும். பைமாஸ் நம்பர் மற்றும் சர்வே எண் வேறுபட்டு உள்ளது என்ற விபரம் 2010 ல் தெரிந்து கொண்டேன். நான் தாக்கல் செய்த பிராது மற்றும் திருத்தப்பட்ட பிராதில் வாய்காரலாக நானும், எனது அண்ணனும் பாகம் பிரித்துக் கொண்டோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

என்னுடைய தகப்பனாருக்கு நானும், எனது அண்ணன் மட்டும் தான் வாரிசுகள் ஆவோம். எனது அண்ணன் தொடக்க கல்வி வரை படித்துள்ளார். பாகம் பிரித்த பின்னர் நானும், எனது அண்ணனும் அவர் அவர் பாகத்தை அனுபவித்து வந்தோம். அந்த நேரத்தில் நானும், எனது சகோதரரும் UDR பட்டா சம்பந்தமாக ஆலோசிக்கவில்லை. பிராதில் எனது

அண்ணன் கார்மேகதேவருக்கு UDR பட்டா வில் அவரது பாகத்திற்காக கூடுதலாக பாகம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு கூடுதலாக வந்தது சம்பந்தமாக எங்கள் இருவருக்குள் கேட்டு வாங்கிக்கொள்ளவில்லை. UDR பட்டா 512 ன் அடிப்படையில் தான் நான் ரோஸ் மெர்கண்டைல் பிரைவேட் கம்பெனிக்கு 24.11.2010 ம் தேதியில் நான் கிரையம் கொடுத்துள்ளேன். எனது அண்ணன் கார்மேகத்தேவர் UDR பட்டா 168 ன் படிக்கு தாவா சர்வே சொத்தை 1 வது பிரதிவாதிக்கு எனது அம்மா சந்திராவுக்கு 04.05.2006 ம் தேதியில் கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த விபரம் எனக்கு தெரியும். 1 முதல் 11 பிரதிவாதிகள் மோசடி செய்ததாக சொல்லியுள்ளேன். அது பற்றிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் ஆவணங்களை எடுத்த விதத்தில் எனக்கு மேற்படி விபரம் தெரியும்.

எந்த பிரதிவாதி எந்த சொத்தை வாங்கினார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். சர்வே நம்பர் 384/1, 384/2, 384/3K, 384/3L ஆகிய நான்கு சர்வே நம்பர்களையும் அவர்களுக்குள்ளாகவே மாற்றியுள்ளார்கள். தாவா சொத்தில் சர்வே நம்பர் 384/1 துரைராஜ் என்பவர் பெயரில் UDR ல் பட்டா உள்ளது. ஆனால் துரைராஜ் இளைய மகன் பாலகுமார் தவறாக என் பெயரில் பட்டா உள்ளது என்றும், அதை மனோகரனுக்கு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி விபரம் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் 2022 ல் நகல் எடுத்த போது தெரிந்து கொண்டேன். தட்சணாமூர்த்தி, பழனிச்சாமி, தங்கம்மாள், அனந்தப்பன் ஆகியோரை ஏன் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் அவர்கள் அனைவரும் இறந்துவிட்டார்கள். அவர்களாது வாரிசை ஏன் வழக்கில் சேர்க்கவில்லை என்றால் வாரிசு விபரம் எனக்கு தெரியாது.

பிராதில் 6ம் பிரதிவாதிக்கு 4ம் பிரதிவாதி கடந்த 05.07.2019 ம் தேதியில் ஆவண எண் 588/2019 ன் படிக்கு கிரையம் பெற்றுள்ளார் என்ற விபரத்தை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 6—ம் பிரதிவாதி NLC நிறுவனம் என்றால் சரிதான். அவர்கள் தாவா இடத்தில் சூரிய ஒளியின் மூலம் மின் உற்பத்தி செய்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் வழக்கு தாக்கல் செய்யும் பொழுது தெரியாது. மேற்படி நிறுவனம் 2018—ல் தளவாடங்கள் அமைத்து 2019 முதல் மின் உற்பத்தி தொடங்கிவிட்டார்கள் என்று சொன்னால் தவறு. தாவா சொத்து உட்பட அதை சுற்றியுள்ள பல சொத்துக்கள் 6—ம் பிரதிவாதியின் பெயரில் தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். 6—ம் பிரதிவாதி சோலார் பேனல்கள் அமைத்து மின் உற்பத்தி செய்கிறார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் நேரில் பார்க்கவில்லை.

வருவாய் துறை அதிகாரியை வழக்கு சேர்த்துள்ளேனா என்றால் சேர்க்கவில்லை. வருவாய் துறையில் ஆட்சேபனை மனு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். மேற்படி மனு விவரங்களை பிராதில் சொல்லியுள்ளேன். ஜுலை 2018 வாக்கில் நான் மனு கொடுத்துள்ளேன். தாவா சொத்துக்களின் நான்குமால் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு தெரியும். அசல் வழக்கின் கடைசி பக்கத்தில் சொல்லியுள்ளேன். தாவா சொத்து விவரத்தில் சர்வே எண் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், யார் பெயரில் உள்ளது என்று குறிப்பிடவில்லை என்றும் சொன்னால் சரிதான். தாவா சொத்துக்களை எனது உடன் பிறந்த அண்ணன் கார்மேகத்தேவர் விற்றுவிட்டார் என்றும், எனக்கும் இந்த சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதை ஏற்றுக் கொள்ள முடியாது. மேற்கண்ட கார்மேகத்தேவர் தாவா சொத்தை

யார் யாருக்கு விற்பனை செய்துள்ளார் என்பதை கொடிவழி மூலம் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அதில் கண்டுள்ள விவரங்கள் சரிதான். கார்மேகத்தின் வாரிசுகளை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை பொறுத்து தாவா சொத்தின் விஸ்தீரணம் அளவுகளை நீதிமன்றத்திற்கு தெரிவிக்க வேண்டிய கடமை என்னை சார்ந்தது தான் என்றால் சரிதான். அதற்குரிய வருவாய் துறை ஆவணங்களைக் கொண்டு தாவா சொத்துக்களை அளப்பதற்கு மனு ஏதும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தாக்கல் செய்யவில்லை.

ராமச்சந்திரன் என்பவரை ஏன் வழக்கில் நீக்கிவிட்டீர்கள் என்றால் அவர் இறந்துவிட்டதால் நீக்கினோம். அவரது வாரிசுதாரர்களை வழக்கில் சேர்க்கவில்லை. தாவா சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்றும், எனது அண்ணன் சொத்தை விற்றுவிட்டார் என்றும், அதனால் எனக்கு எந்த பாத்தியமும், உரிமையும் கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. அதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. மேற்படி கிரைய ஆவணங்கள் அனைத்தும் சட்ட விதிகளுக்குட்பட்டு பதிவுத்துறையால் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. தாவா சொத்து உள்ளிட்ட பல ஏக்கர் நிலங்களை 6-ம் பிரதிவாதி கிரையம் பெற்று சட்ட விதிகளின் படி மின் உற்பத்தி நிலையம் அமைத்து பல ஆண்டுகளாக அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. அதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. மேற்கண்ட அனைத்து விவரங்களை தெரிந்து கொண்ட நான் இந்த வழக்கை தாக்கல் செய்ய முகாந்திரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு முகாந்திரம் உண்டு. 6-ம் பிரதிவாதி அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன்

**என்றும், வழக்கில் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.